விலைக்கு, அவர்கள், அந்த நகர்மன்றம் எடுத்துக்கொள்கின்ற காரணத்தினாலே, அந்த இடத்தைக் கொடுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியுடன்தான் கொடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்த ஏழையெளிய மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்காகக்கூட, நாகை மாவட்டம், சீர்காழி வட்டம், அருள்மிகு சட்டநாத சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம், அரசு நிர்ணயம் செய்த விலைக்கு, *24* ஏக்கர் *81* சென்ட் நிலத்தையும் வழங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் வடக்கு பொய்கைநல்லூர் நந்திகேசுவரர் கோயில் இடத்தை, *1* ஏக்கர் *98* சென்ட் நிலத்தையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்குத் தர ஆணையிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்தணப்பேட்டை என்ற இடத்தில் அண்ணாமலைநாதர் சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக *13* ஏக்கர் *67* சென்ட் நிலத்தை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். சில ஆலயங்களில், அங்கே அந்த ஆலயங்களுடைய சிற்பங்கள் எல்லாம் பழுதடைந்திருப்பதாகச் சொன்னார்கள். இப்போதுகூட, திருநாகேஸ்வரத்தில், கும்பகோணத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் *7* கோபுரங்கள், ஏறக்குறைய *3* கோடியே *50* இலட்சம் ரூபாய் அளவில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது என்பதையும் இங்கே பெருமையோடு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *47*, திரு. ஆ.கு.சீ. அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

47—

கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம்

***20489—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2005 செப்டம்பர் 26]

பெரணமல்லூர் தொகுதி, தேவியாபுரத்தில் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறு தொழில்களை வளர்க்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே செயல்படுத்தி, தமிழகத்தில் ஒவ்வொரு ஒன்றியங்களில் ஒரு கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலைகள் பல நிறுவி, தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, தமிழகத்திலே தொழில் வளம் பெற சாதனை படைத்த தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, உழவர் பாதுகாப்புத் திட்டத்தினைக் கொண்டு வந்து ஏழைகளின் வீடுகளில் ஒளியேற்றி வைத்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம் அமைத்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு மாற்றுத் தொழிலாக, சிலை, கல் சிற்பங்கள் செய்வதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்கும் புதியதோர் திட்டத்தினைக் கோரியிருந்தேன். 'இல்லை' என்ற பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பு இல்லாமல் மிகுந்த அவதிப்பட்டிருக்கிறோம் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த மக்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய இயலுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆசியோடு, பெரணமல்லூர் தொகுதியிலே தேவியாபுரத்தில், உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பாக, தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், பெரணமல்லூர் தொகுதியில் எத்தகைய கைவினைப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கான திறன் படைத்த கைவினைஞர்கள் அந்தப் பகுதியிலே வசிக்கவில்லை என்றும், அவர்கள் தொழில் மையம் ஏற்படுத்துவதற்கு முன்வரவில்லை என்றும் ஆய்விலே பதில் தெரிவிக்கப்பட்டது. எனவேதான், தேவியாபுரத்திலே புதிதாக உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், இதுபோன்று கைவினைஞர்கள் அந்தப் பகுதியிலே

இருப்பதாகக் கண்டறியப்பட்டுத் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவியாபுரம் அருகிலேயுள்ள முடையூர் பகுதியிலே பச்சைக் கற்கள் கிடைக்கின்றன. அவற்றை வைத்து, சிலை சிற்பங்கள் செய்யக்கூடிய பல கைவினைஞர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களை மையமாக வைத்து அந்தப் பகுதியிலே இருக்கிற அந்தத் தொழிலை வளர்ப்பதற்கு ஏதாவது வாய்ப்புள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

48—

சிறு தொழில்களுக்கான பயிற்சி

***28068—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழுவிலுள்ள பெண்களுக்குச் சிறு தொழில்கள் துறைமூலம் அப்பளம், ஊறுகாய், ஊதுவத்தி, மெழுகுவர்த்தி தயாரிக்கும் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், தமிழக முதல்வர், தங்கத் தாரகை அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, ஐம்பதாண்டு கால வரலாற்றில், செஞ்சி மாநகரிலே, மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்காக ரூ. 50 இலட்சத்தை ஒதுக்கிக் குடிநீரைத் தந்து, குடிகாத்த புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களுக்கு, என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து,

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS